2003 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை-பழவேற்காடு (வழி) மீஞ்சூர், தத்தைமஞ்சி காட்டூர் பிரதான வழித்தடத்தில், காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம், பொது மக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால், 'மீஞ்சூர்-தத்தைமஞ்சி' எனக் கூடுதலாகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியத்தைச் சார்ந்த பொது மக்கள் நீண்ட நாட்களாக காரனோடை பஸ் நிறுத்துமிடத்திலிருந்து ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை தடம் எண் 114-ஏ, 57எஃப்-ஐ நீட்டித்தர வேண்டுமென்று கோரி வந்தார்கள். மேற்காணும் கோரிக்கையை ஏற்று, இரண்டு பஸ் தடங்களையும் ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை கடந்த வாரம் நீட்டித்துத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பஸ் நிலையத்திலிருந்து தத்தைமஞ்சி வரை, தடம் எண் 27, ஒரே பஸ் ஒரு நாளைக்கு காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகள் இயக்கப்படுகின்றது. ஆனால் மீஞ்சூர்-தத்தைமஞ்சி தடங்களின் இடைப்பட்ட பகுதிகளில் நெய்தவாயில், வாயிலூர், திருவல்லிவாயில், தாத்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களான, திருபழவேற்காடு, கடப்பாக்கம், ரெட்டிப்பாளையம், குமாரஞ்சேரி, அபிராமமடம் போன்ற பகுதிகள் உள்ளன. மேற்காணும் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். நெருக்கடி நிறைந்த நேரங்களில் காலை, மாலைகளில் பள்ளி மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் பயணம் செய்கிறார்கள். தேவையான பஸ் தடங்கள் இல்லாததால் தனியார் பஸ், மேக்சி வேன், லாரி போன்றவற்றில் பயணம் செய்கிறார்கள். அதனால் அடிக்கடி விபத்துகள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லையென்ற பதிலை மறுபரிசீலனை செய்து மேற்காணும் நிலையைப் போக்க, பகுதி மக்கள் கோரிக்கையை

[2003 ஏப்ரல் 30

ஏற்று மீஞ்சூர் பஸ் நிலையத்திலிருந்து தத்தைமஞ்சி வரையிலும், இரண்டு பேருந்துகள் இல்லையென்றாலும், ஒரு பேருந்தையாவது இயக்குவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீஞ்சூர்-தத்தைமஞ்சி தடம், சென்னை-பழவேற்காடு (வழி) மீஞ்சூர், தத்தைமஞ்சி, காட்டூர் பிரதான வழித் தடத்தில் அமைந்துள்ளது. இத்தடத்தின் நீளம் 14 கிலோ மீட்டர் ஆகும்.

இத்தடத்தின் வழியாக காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்து கழகப் புறநகர்ப் பேருந்து மட்டும் 30 நடைகளும், நகரப் பேருந்துகள் மூலமாக 24 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் தற்போதுள்ள போக்குவரத்து அடர்வைக் கணக்கிட்டுப் பார்த்தால் மிகக் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற இந்தப் பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அந்தப் பகுதியிலே மக்களுடைய தேவைக்கு ஏற்ப, கூடுதலாகப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கிராமப்புறங்களிலே சென்று வந்த பேருந்துகள் பல்வேறு காரணங்களைக் காட்டி, தனியார் மினி பஸ்களை விடவேண்டுமென்ற காரணத்திற்காகவும், அந்த வழித் தடங்களில் போதிய வசூல் இல்லையென்ற காரணத்திற்காகவும், சாலைகள் சரியாக இல்லையென்ற காரணத்தைக் காட்டியும், நிறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை கிராம மக்கள் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த வழித்தடங்களிலே இயக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் பொது மக்களுடைய தேவையைக் கருதி, தேவைக்கு ஏற்ப, கோரிக்கைக்கு ஏற்ப, எந்தெந்த இடங்களிலே இயக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அந்தந்த இடங்களிலெல்லாம்-- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, படிப்படியாக அதையெல்லாம், அந்த வழித்தடங்களில் எல்லாம் பேருந்துகளை விடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 365, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

365—

பேருந்துகளில் அரசுச் சின்னம்

***12793—திரு. இரா. தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் கோபுரச் சின்னத்தை அரசுப் பேருந்துகளில் பொறிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோபுரச் சின்னம், அரசுப் பேருந்துகளில் பொறிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள அரசு சின்னமான இரட்டை யானைச் சின்னத்தை கேரள அரசுக்குச் சொந்தமான அரசுப் பேருந்துகளில் பதித்துள்ளது. அதுபோல, தமிழக அரசின் சின்னமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரச் சின்னத்தை தமிழக அரசுப் பேருந்துகளில் பதித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.